செ.வெ.எண்: 388/2016 நாள்: 21.06.2016

# பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை இயந்திரம் (Point of Sale) மூலம் 01.07.2016 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட உள்ளது. குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுக் கொண்டதற்குரிய விபரம் ரசீதுக்கு பதிலாக தங்களது கைபேசியில் (SMS) அனுப்பப்படும். எனவே குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் வாங்க வரும் போது தங்களது கைபேசி எண்ணினை இம்மாத இறுதிக்குள் குடும்ப அட்டைதாரர்கள் சம்மந்தப்பட்ட நியாயவிலைக் கடைகளில் அளித்து அத்தியாவசியப் பொருட்கள் பெறப்பட்டதற்கான விபரங்களை SMS மூலம் அறிந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றிட கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் ஒத்துழைக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சஜ்ஜன்சிங் ரா.சவான் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

ஒம்/-சஜ்ஜன்சிங் ஆர்.சவான்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

உண்மை நகல் / உத்தரவுப்படி

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.